உளி-1 | ஓசை-70 | பிப்ரவரி-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

கி. சரஸ்வதி - 4
புதுகை விஜய்ஆனந்த் - 5
ரா.ராஜசேகர் - 6
கதிரவன் வீ - 6
மகேஷ் சிபி - 7
அ.ஸ்ரீனிவாசன் - 7
மகிழினி காயத்ரி - 8
உமா மஹேஸ்வரி பால்ராஜ் - 9
அன்பு மணிவேல் - 10
முனியாண்டி ராஜ் - 11
சந்துரு ஆர்.சி - 12
துளசி வேந்தன் - 13
மெகராஜ் பேகம் - 13
ச.ஆனந்தகுமார் - 14
சுஜாதா கண்ணன் - 14
ஐ.தர்மசிங் - 15
பாண்டிச்செல்வி விஸ்வநாதன் - 16
தங்கேஸ் - 17
சசிகலா திருமால் - 18
ரகுநாத் வ - 19
புன்னகை பூ ஜெயக்குமார் - 19
பாட்சா - 20
கோலப்பன் கணேசன் - 20
எஸ்தர் ராணி - 21
அய்யாவு பிரமநாதன் - 22
குபோதினி - 23
இரா மதிபாலா - 23
யாழினி - 23
சுயம்பு - 24
வீரமணி - 25
மா.பாலசுந்தரம் - 25
க. அய்யப்பன் - 26
கவி செல்வா - 27
தங்கராஜ் பழநி - 28
நேசன்மகதி - 29
சு.ஜெய் - 30
ஸ்ரீ வாரி - 30
அன்றிலன் - 31
கா வெங்கடேஸ்வரன் - 32
கலைச்செல்வி - 33
ஜனனி - 34
ஸ்ரீ வி.முத்துவேல் - 34
ஸுமைஹா - 35
சூர்யநிலா - 36
பூங்கோதை கனகராஜன் - 36
ரிஸ்கா முக்தார் - 37
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 38
லக்ஷ்மி - 38
மா. காளிதாஸ் - 39

# மாயவன்



ஒற்றைப் பயணச்சீட்டு
மட்டும் வாங்குகையில்
குற்றவுணர்வு இல்லாமலில்லை

உன் பெயரைச் சுமந்த பக்கங்களைத்
திருட்டுத்தனமாகத்
தேடுகையில் அதே இடறல்

உனக்கெனத் தவறாமல்
பிரார்த்திக்கும்போது
நகுகிறார் கடவுள்

அலைபேசி ஒலிக்கையிலெல்லாம்
அழைப்பவன் நீ தான் எனக்
கொள்கிறது நெஞ்சம்

வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருப்பாயென்ற
நினைவில்
பேசியபடி ஓட்டிச் செல்கிறேன்

ஏழேழு ஜென்மத்திற்கும் எனைப் பிரியாமலிருக்கும்
சாபமொன்றைத் தான்
உனக்கெனத் தரத் தவமியற்றுகின்றேன் நான்

**கி. சரஸ்வதி**



உன் நினைவுகளை
தீயிட ஆயிரம் தீக்குச்சிகள் வாங்கினேன்

ஆயிரமாயிரம் விறகுகள் வாங்கினேன்

போதாதற்கு இதோ
இனி என்னையே
தருகிறேன்..!

அஸ்திக்கலயத்தை மட்டும்
நாம் தடம் பதித்த
அதே கடற்கரையில்
கரைத்து விடு

நீ கால்நனைத்த
அலையின் நாவுகள்
எனை தின்று தீர்க்கட்டும்..!

❀ **புதுகை விஜய்ஆனந்த்**

# குளிரின் சாயல்



கூடவே வரும்
தொண்டை கவ்வும்
நிகழ்வுகளும் நினைவுகளும்
ஊருக்குப் போய் வரும்போதெல்லாம்

இந்தமுறை
இன்னும் கூடுதலாக
குளிரும் சேர்ந்து

உடன்மட்டுமன்று
ஒட்டிக்கொண்டும்
ஊர் விட்டு ஊர் வந்தது

அதனால் இப்போதெல்லாம்
இங்கிருக்கும் குளிரிலும்
உறைந்திருக்கிறது
ஊர்க் குளிரின்
சாயலும் வாசமும்

**ரா.ராஜசேகர்**

புதுசா இல்ல
எப்போதும் போலத்தான்
தாத்தன் குளுப்பாட்டுவான் மாட்ட

கொம்புக்கு மாமன் அடிச்ச வண்ணம் அத்தன அழகா
இருக்கும்

ஆத்தா மாட்டு நெத்தியில வச்ச மஞ்சள் குங்குமம்
சாமியா மாத்தி வைக்கும்

படச்ச மொத சோத்த மாட்டுக்கு வச்சு விழுந்து
வணங்கியல பரவசத்தில கை முடியெல்லாம் குத்தி
நிக்கும்

இந்த ஒரு நாள்ல புது கணக்கா மூக்கநா கயிறு புடிக்க
எங்கூட நட பழகும் சாமி

ஆத்தா தாத்தா மாமன் சித்தின்னு பெருநா கண்ட
பெருநாள கை பேசியில கொண்டாடுறேன் வெறும்
பயலா

**கதிரவன் வீ**



வேர்களைச் சுருட்டி
நெடு நாட்களாய்
நெகிழிப் பையிலேயே
பதைபதைப்புடன் அமர்ந்திருந்த
கொய்யாக் கன்றை
விடுவித்து
பூமியின் மடியில் கிடத்தி
நீரூற்றுகிறேன்
சட்டென்று கிளர்ந்துகொள்ளும்
கொய்யாவின்
உணர்விழைகள்
பூமியின் உணர்விழைகளோடு
பொருந்திக் கொள்கிறது
இனி கொய்யாவை வளர்க்கும் பொறுப்பு
பூமியினுடையது

மகேஷ் சிபி

கூசச்செய்யும் சூரியனை
பழிவாங்கவெல்லாம்
முடியாது.
வேண்டுமானால்
கண்களை ஒருமுறை
மூடித் திறந்து கொள்ளலாம்!
அது போதும் தானே!

அ.சீனிவாசன்



ஒரு விண்மீனாக
மாறுவதென்பது
அவ்வளவு எளிதில்லை தான்

நொடிக்கொரு முறை
புன்னகைத்துக்கொண்டே
இருப்பது
இயலாதுதான்

இருந்தும்
இல்லாமலிருக்கும்
பகலையும்
நேசிப்பதென்பது
நெருப்புத்துண்டங்களை
பூப்போல் பாவிப்பதல்லவா

ஆயினும் என்ன
ஒரு குழந்தை
சுட்டிச்சுட்டி
எண்ணும் கணத்தில்
இன்னும் கொஞ்சம் கூடுதலாய்
மின்னும்
அவைதான்
சட்டென
தீர்ந்து எரிநட்சத்திரங்களாய்
மறைந்து போகின்றன

பிரபஞ்சத்தின்
கருவறையில்
இருள்குருதி...
தாய்மையின் தீரா விடாய்
விண்மீன் குழந்தைகள்

❀ மகிழினி காயத்ரி

# பரிசு



அத்தனை
இருளும்
பழகியபின்
எந்த மூலையிலும்
ஓடி ஒளியாத
ஒளியைப் பிடித்து
மூக்குத்தியாய்
அணிந்து கொண்டேன்

ஏதொன்றும்
அச்சுறுத்தும்போது
அதென்னைத்
தாங்கிப்பிடித்துப்
பத்திரம் செய்யும்

அலமாரியில்
இன்னும் கூட
கடலை விற்று
வாங்கிய சீலையில்
தலைதுவட்ட
ஓர்வானம்
தாகம் தீர்க்க
ஓர் மழையென
உண்டு

பிறிதொரு நாளில்
நான் அழுது
கரையும் போது
சீண்டாது இருக்க
நீ முன்பே எனக்கு
பரிசாய் தந்தவை....!!!!

❀ உமா மஹேஸ்வரி பால்ராஜ்



•
ஆறறிவு ஆண்கொம்பு போல...
அதனினும் குறையறிவில்
பதரெதுவும் உண்டோ சொல்.

•
குடுவையில் கற்களை நிறைத்து தாகம் தணிந்த
காக்கைக்கு
உப்புக் கரித்ததுவாம்...
ஒரு கணம் நதி முகம் கண்ட
கல்லின் கண்ணீரதுவோ.

•
கொதிக்கிறது கோழி
கூரையேறிக் கொண்டது இறகு...
காதுகுடையும் வரை
நீளுகிறது அதன் ஆவி.

•
பறவைகள் இல்லாது போனால்
வானம் என்ன செய்யும்..
தான் வானம் என்று அறிந்துகொள்ள..

வானம் இல்லாது போயின்
பறவைதான் என்ன செய்யும்
தான் பறவையென்று சொல்லிக் கொள்ள.

•
உதிர்ந்து கிடக்கும் இந்த
இறகின் பசி..
எங்கு
மிதந்து கொண்டிருக்கிறதோ.

•
ஒரு கூடிழந்த பறவைக்கு
ஒரு வெட்டுப்பட்ட மரம்
தட்டுப்பட்டால்..
இரண்டும்
என்ன பேசிக்கொள்ளும்..??!

•
பறக்கும் எதையும்
கூண்டில் அடைத்துவிடுகிறேன்..
கூடகன்று என்னால் தான்
பறக்க முடிவதில்லை.

•
நன்றிக்கு நாயைச் சுட்டுகிறோம்..
நம்மை என்ன சொல்லி சுட்டுமது.

•
பிள்ளையைப் போல கொஞ்சுகிறது பூனை
பூனையைப் போல கத்துகிறது
பிள்ளை..
பிள்ளையில்லாக் கூடெனினும்
பேதமில்லை
கிள்ளைமொழி சமைக்கும்
பூனைமொழிக்கு.

அன்பு மணிவேல்

# மழை



துளி ஒன்றை ஏந்திக் கொண்டு
தாழ்வாரம் நோக்கி விரைவாக விழைகிறது
சாரல் ஒன்று
வெகுநாள்களாக நீரைப் பார்க்காத
ரோசாச் செடியொன்றின் உதடுகளில்
புன்னகை உதிர்கிறது இப்போது
காய்ந்த மண்ணுக்குள்
வேர்கள் உயிர்ப் போராட்டம் நடத்திக்
கொண்டிருக்கின்றன
பூப்பதற்காக எழுந்த மொட்டொன்று
பூக்காமலேயே சூம்பிக் கிடக்கிறது
நீர் ஊற்ற வேண்டியவள்
பூக்களை வெறுத்தும் நாள் கணக்காகிறது
கம்பியிட்ட சன்னலின் ஊடே
சாடிகளில் நிறைக்கப்பட்ட செடிகளைக்
கவனித்துக் கொண்டே இருக்கிறாள்
செடிகளின் இலைகள் தலை கவிழ்ந்திருக்கின்றன
விழிகளற்ற மொழிகளற்ற ஓர் உரையாடலில்
மழை வேகமாகப் பெய்யத் தொடங்குகிறது
சாரலை அடக்கி வைக்க
திரை வேகமாக இறக்கப்படுகிறது
படாரெனக் கதவு சாத்தப்படும் ஓசையில்
மழை வேகமாக அழத் தொடங்குகிறது

**முனியாண்டி ராஜ்**



பனிக்காலம்
இன்னும் அழகாகிவிடுகிறது
பறவைகள்
சிறகுகளில் சுமக்கும்போது

மலைகளின் மீது
யானையின் லத்திகள் போல்
அமர்ந்திருக்கிறது
பனியிரவு

சூரியன் வருவதற்குள்
சிலந்திவலைகளை
தின்றுவிட முயன்று தோற்கிறது
பனித்துளிகள்

தூய்மையை நிரூபிக்க
தும்பைப்பூவுக்கும்
பனித்துளிக்கும்தான்
போட்டி

பனிக்காலத்தில்
விவசாயியின் முதுகில்
குளிர்ப்பாசனம்

நகரத்தில் குடிபெயர்ந்தவனின்
நினைவில்
ஏக்கமாய் தெறிக்கிறது
வரப்பில் நடந்த பனித்துளிகள்

காட்டுக் கனகாம்பரமும்
டிசம்பர் பூக்களும்
பதின் பருவ பெண்களுக்கு
பனிக்காலம் அளிக்கும்
கொடை

அதிகாலை குளத்திலும்
வைக்கோற்போரிலும்
புகைந்தெழுகிறது
இரவெல்லாம் இறங்கிய பனி

காய்ந்த தழைகளில்
குளிர்விரட்டும்
சிறுவர்களுடன்
முதியவனின் விரல்களும் சேர்ந்துகொள்கின்றன.

பனியாடையை
விலக்கிய பின்
பூமியின் நிர்வாணம்
ரசிப்பதாயில்லை

பனியில் நனைந்து
காவல் தெய்வம்போல்
மௌனமாய் நிற்கும்
குடிநீர்த்தேக்க தொட்டியின் மீதமர்ந்து
நாற்றம் கொள்ளாமல்
கரையும் காகத்தின் குரலில்
சாபங்கள் உதிர்கிறது...

❀ சந்துரு ஆர்.சி



கிளையின் நடுவே
கயிறு கட்டி
தூக்கில் தொங்கியவனின்
கால்கள் துடிதுடித்து
அடங்கும் காட்சியை,

அதே கிளையின்
நுனிக்கூட்டிலிருந்து,
முட்டையிட்டுக்கொண்டே
மிரட்சியோடு கவனிக்கும்
பறவையொன்றின்
கண்கள் ஊடே
பார்க்கிறார் கடவுளும்!.

**துளசி வேந்தன்**

கத்தியினால்
கீறிக் கீறி வலிகளில்
சமைத்த
இசைக் கருவியை...
முத்தங்களால்
ஒத்தடமிடுகிறான்
புல்லாங்குழல் வாசிப்பவன்....
அதுவும் நன்றியை நயமாக
உரைத்தது மெல்லிசையாக...

**மெகராஜ் பேகம்**



தூளி சுகம் மறக்காத
பெரிய பிள்ளையைப் இறக்கிவிட்டு

கைப்பிள்ளையை
தொட்டிலிலிட
தூக்கம் கலைந்த பிள்ளை திடுக்கென விழித்து
முழிப்பதாய்

குளிர் இரவில்
பயணிக்கும் ரயிலில்
நம் நிறுத்ததில்
பாதியில் இறங்குவதும்

**சுஜாதா கண்ணன்**

திரும்ப திரும்ப சொந்தங்களுக்காக புரட்டுகிற
கல்யாண புகைப்படங்களும் ஒளிப்பட காட்சிகளும்
உனக்கு
மகிழ்ச்சியையும்..
மற்றவர்களுக்கு
அன்றைய நாளில் திரும்பி
வாழ்த்த திருப்தியையும் கொடுக்கின்றன..
எனக்கு மட்டும்தான் ஏனோ அப்பா வாங்கிய கடன்
நினைவுக்கு வந்து
நெஞ்சை அடைக்கின்றது..

**ச.ஆனந்தகுமார்**



காற்று வெளியில் கலந்து
காது வழி புகுந்து
உள்ளத்தில் நிகழ்த்தும்
சப்த வித்தைகளை
பா வங்களால் வெளிப்படுத்தும்
மானுட முகங்களில்

துள்ளல் இசைத் துளிர்க்கிறது
அவலச் சுவை எழும்புகிறது
கொண்டாட்ட நிலை கைகூடுகிறது
வலியின் நிறம் படர்கிறது
காதல் சுவை கசிகிறது

உதடுகளின் உயிர்க்காற்றை
விரல்களால் வசப்படுத்தும்
மனங்களுக்காக
அலையலையாகக் கலையும்
புல்லாங்குழலின் மௌனத்தில்

வேறு என்ன
பெரிதாக இருந்து விடப்போகிறது
அது துளையிடப்பட்ட வலியைவிட...

ஐ.தர்மசிங்



பூண்டும் சின்ன வெங்காயமும் போட்டு வைக்கும்
புளிக்குழம்பு
என்றால்
எனக்கும் தங்கைக்கும் பிடிக்காது என்பதால்
சோற்றிலூற்றி பிசைந்து அவசரமாய் ஏமாற்றி உருட்டி
கையில் வைப்பாள் அம்மா
பள்ளியின் மதிய உணவு இடைவெளியில்

திருத்தம் இல்லாத அந்த பிசுறு தட்டிய உருண்டையைப்
போல் இருந்தது
முழுநிலாவிற்கு
முந்தைய நாள் இரவு நிலா

அழகான வட்டமாய் அல்லாது
அரை குறையாய்
அள்ளிச்செருகிய
கொண்டை போலும்

திருத்திக் கொள்ளாத அவளின் சாந்துப்பொட்டின்
சாயலிலும்
சமரசம் இன்றி மின்னியது நிலா முகம்

சின்னச்சின்ன குறைகளை சீர் தூக்காது வாழ்வை
கொண்டாடி மகிழும் அம்மாவின்
வாஞ்சையைப் போலவே

**பாண்டிச்செல்வி விஸ்வநாதன்**



எப்படியாவது வயசுக்காலங்களில்
நம்மை ஒரு பூதம்
பிடித்துக்கொள்கிறது

பிறகு வாழ்க்கை முழுவதும்
அதை தோளில் ஏற்றிக்கொண்டு
சுற்றித் திரிவதே
நமது பிழைப்பாக இருக்கிறது

எனக்கு நேசிக்கத் தெரியாது
விட்டு விடு என்றால்
கெக்கலிட்டு சிரித்தபடி
நேசத்தை விட பெரிது உலகத்தில் பிறிதொன்றில்லை
என்கிறது

கருணையைப் பற்றி சொன்னால்
நீ வேறு கிரகத்தில் இருக்க வேண்டிய
ஆள்தான் என்று கிண்டல்

நான் ஒரு முறை அதை
தழுவிக் கொள்ள முடியாது என்று
சொன்ன போது
என் நிழலை திருடிக் கொண்டு சென்றுவிட்டது

நான் பட்டுப்பூச்சியைப் போல
எடையற்றவனாகி
துயருற்றேன்
கடவுள் என் கனவில் வந்து
உலக உருண்டையை
பரிசளித்தார்

அதுவோ வெறிகொண்ட மிருகம் போல
என் கரங்களில் சுழன்றாடியது
என்னை மன்னிக்க வேண்டி
மனதார வேண்டினேன்
அது என் மனதின் நல்ல பதிவை மட்டும்
கொஞ்சம் கிள்ளி எடுத்துக்கொண்டு
சென்றது

இப்போது வள்ளலார் ஞாபகத்திற்கு
வருவதேயில்லை
பிறகு எப்படி வாடிய பயிர் வரும்?

பிறகு எல்லோரையும் போலவே
என் தோளிலும் அந்த குரங்கு குட்டி
தொற்றிக்கொண்டேயிருக்கிறது

புத்தர் என்றால் காளானும்
கர்த்தர் என்றால் சிலுவையும் தான்
ஞாபகத்திற்கு வருகின்றன

இப்போதெல்லாம்
வானில் பறக்கும் சிறு பறவையை பார்த்தாலும்
அவ்வளவு பொறாமையாய் இருக்கிறது

**தங்கேஸ்**



மௌனம் சம்மதம் அல்ல...

மௌனம் சம்மதம் என்று கூறுவதை
சமயங்களில்
மௌனங்களே சம்மதிப்பதில்லை..

விரும்பிய உறவுகள்
விடைபெறும் தருணம்
மௌனம் சம்மதமல்லவே..

உணர்வுகளின்
கெட்டிப்பட்ட திடநிலைதானே
மௌனம்..
வெளிபடுத்தவியலா
அன்பை, அழுகையை,
சிரிப்பை, வெறுப்பை,
வெறுமையை, பிரிவை,வலியை...
இப்படி எண்ணங்களின் சிறைப்பட்ட
ஊமை நிலைதானே மௌனம்...

ஆதலால் தான்...
மௌனம் சம்மதம் என்று கூறுவதை
சமயங்களில்
மௌனங்களே சம்மதிப்பதில்லை...

❀ **சசிகலா திருமால்**

# உயிர்பேரம்



தடித்த மீனொன்றின்
கண்கள் பிதுங்கியதில் வெளிறியிருக்கிறது கடல்

புலம்பிய அதரம்
எடையிட்டதும்
சாந்தமடைகிறது கனம்

துண்டாடப்பட்ட
கண்களில் உருள்கின்றன
வானும் சமுத்திரமும்

உயிர்பேரம்
கரைசேராத மனிதர்கள்
கடக்க கடக்க

மீன் சந்தையில்
சப்தமற்றுக்குக்கிடக்கிறது
கடற்கரை!

❀ **ரகுநாத் வ**

பிடித்த திசையில்
பந்தை உருட்டி விளையாடுகிறது காற்று
ஆனால்
ஆருடம் பார்க்கிறான் குட்டியப்பன்..

❀ **புன்னகை பூ ஜெயக்குமார்**



ஒரு இசை குறிப்பிற்குள்
உன் வார்த்தைகளைக் கோர்க்கிறேன்....
உன் நிசப்த நேரங்களும்
இசைக் கோர்வையில் வாசிக்கத் தொடங்குகின்றன!
பெருவெளியின் மூச்சு
சருகுகளைப் பறக்கவிட அசையும் தளிர்களின்
முனகல்கள்
கண்மூடிக் கேட்டால் தியானம்!
பறவையின் கோதலில் உதிரும் இறகு பியானாவின்
கட்டைகளை அசைக்கிறது.
மெல்லியவோடையில் நெளியும் கூழாங்கற்களின்
அசைவு ஜலதரங்க பேச்சு!
ஒரு சொட்டு விழும் எச்சமும் விதை சுமந்த
வனத்தின் இசை!
தொலைந்து போன என்னைத் தேடுவதற்காக உன்
புல்லாங்குழலை இசை
இந்த ஆடு தனியாகத் தவிக்கிறது!
.

**பாட்சா**

இணையைப் பிரித்து
சிறகை முறித்து நான்
சிறை வைத்திருக்கும் என்
செல்லக் கிளியை
நன்றி என்றும் லவ் யூ என்றும்   சொல்ல
பழக்கியிருக்கிறேன்.

**கோலப்பன் கணேசன்**



நகத்தின் தொப்பிகளைக்
கடித்தெறிவதாய்
எளிதிலில்லை நினைவுகள்
பேசுகின்ற மௌனங்களை
அறையெங்கும் ததும்பவிட்டு
கோரத் தனிமையோடு வாதிக்க விட்டு
என் புலன்களைத்
திறக்கும்
மரகதத் திறவுகோல்களை
இருகைகளில் மறைத்து
கண்ணசந்த சமயம்
திறந்து மூடி
மூடித் திறந்து
எனக்கஞ்சி நான் சாக
என்னை
ஆக்கியதோர்
ஊமை உறவது
நிழல்களின் வெளிச்சத்தில்
தன்னை ஒளித்து
என்னையும் இழுத்து
காலத்தின் பொன்துகள்களை
என் நுகத்தடியாக்கிய
ஊமை உறவது
இழந்திட்ட காலம்
அதீதமோ சொற்பமோ
இனியெப்பொழுதும்
மீட்டெடுக்கப்படாது

**எஸ்தர் ராணி**



இரவின் நிறம் தொட்டு காகம் வரைகிறேன்
நட்சத்திரங்களை
பறித்து எறி கற்களாக
வரையச் சொல்லி
அடம் பிடிக்கிறது இரவு .

•

விரத உணவை சாப்பிட காகம்போல கரைந்து
அழைக்கையில் பித்ருவானது தெரியாமல் வந்து
அமர்கிறது

கடந்த காலங்களில் வந்தவையாயென அறிய
முடியவில்லை
முதுமையில் இறந்த முன்னோர் இளமையாக
தெரிகிறார்

சற்று முன் ருசித்த  கருவாட்டின்  வாடை
தன் அலகில் வீச
சலிப்புடன் கொத்துகிறது
படையல் உணவை

ஒரு துண்டு
அடர் இருளுக்கு இறக்கைகள் முளைத்ததுபோல்
இருக்கும் காகத்திற்கு வேறு பந்தங்கள் எதுவும்
இருந்துவிடப் போவதில்லை அமாவாசை திதி
நாளோடு .

•

மலினமான பறவையென
காகத்தை சொல்கிறோம்
பறவைக் கூட்டத்தில்
காகம் எனும் சொல்லின்
இறக்கைகளை முறித்துவிட்டு
ஒரு கணம்
அன்னாந்து பாருங்கள்
கருப்பாகத் தெரியும்
சூரிய வானம்.

•

ஒரு கைப்பிடியளவுதான் இருக்கும் வேர்க்கடலைகள்

ஒரு வேர்க்கடலையளவுதான் இருக்கும் இரைப்பை

படுகொலை செய்து
கம்பத்தில் தொங்க வைத்த
உழவனின் உறுபசியைவிட
பெரிதினும் பெரிது
காகத்தின் உயிர்.

•

இரவை காண ஆசைகொண்ட காகம்
குளக்கரை மரக்கிளையிலே
தங்கி விடுகிறது

வந்து விட்டது இரவு

வானத்தை பார்க்கிறது
குளத்தை பார்க்கிறது
அப்பளம்போல் நிலா

கொத்திப் பறக்க
பொத்தென்று குதிக்கிறது
குளத்துக்குள்

இப்போது
நொறுங்குகிறது
அப்பளம்போல் இரவு.

❀ **அய்யாவு பிரமநாதன்**



என்ன செய்வது
இவ்வொரு மீச்சிறு வாழ்வை கடக்க
பற்றிக்கொள்ள அன்பெனும் ஒரு
தோள் இல்லாதவரை
தனிமைதின்னும் வாழ்வு தானே
இறப்பிற்கு பிறகு ஏதுமில்லை எனும்போது
இறுகப்பற்றிக்கொள்
போகும்வரை இந்தப்பாதைகள்
கனக்காதிருக்கட்டுமே

❀ **குபோதினி**

பொழுதை
உரிக்க உரிக்க
கிடைத்த இரவில்
ஒன்றுமே இல்லை

வெற்றுடல்.

❀ **இரா மதிபாலா**

அம்மா பற்றிய கவிதைகளும்
அதிகபட்சமாய்
அவளின் சமையலறையோடு
முடிந்துவிடுகின்றன

❀ **யாழினி**



•

எப்போதுமல்ல; எப்போதாவது ஆசைபடுவாள்
வெளியில் செல்ல அம்மா.
அன்றுதான்
எப்போதும் வெளியில் செல்லும் அப்பா ஆசைபடுவார்
வீட்டிலிருக்க

•

ஆலய குளக்கரையில் தனிமையிலமர்ந்து
விரலால் தரையில் கிறுக்குவாள்
ஒரு பெண் ஓவியத்தை,
அதன் நெற்றியில் மட்டும் பொட்டாய்
வடித்திருந்திருக்கும்
அம்மாவின் ஒரு சொட்டு கண்ணீர்

•

அம்மாவிற்கு அப்பா அதிக கட்டுப்பாடுகள்
விதித்ததில்லை
ஆனால் சொல்வார்
கட்டுபாடுதான் சுதந்திரமென்று

•

அம்மா வரையும் ஓவியத்தில்
அதிகம் ஊமைகள் பேசிக்கொண்டிருக்கும்

•

வானம் பார்க்காத அம்மாவிற்கு
எப்படி தெரிந்திருக்கும்?
நிலா போன்றே தோசை வார்க்கிறாள்

•

அம்மாவின் அஞ்சறை பெட்டிக்குள்ளிருந்துதான்
அவ்வப்போது ஒரு கவிதையை எடுப்பேன்
சிலநேரங்களில்
அதில் கண்ணீர்
பிசு, பிசுப்பு ஒட்டியிருக்கும்

தான் படும் கோலத்தைதான்
கோலமாய் வரைவாள் முற்றத்தில்
அம்மா ,
அதிக பின்னல்களோடு

❀ சுயம்பு

# சாத்திரம் ஏதுக்கடி!



கோடை வெக்கையும்
கொசுக்கடியும்
மடக்கு கட்டிலின்
சமன் இன்மையும்
கணுக்கால் இடிக்கும்
இரும்புச்சட்டமும்
உறக்கம் தொலைத்து
தகிக்கும் விழிகளும்
புறண்டு படுத்து
வலிக்கும் தோள்களும்
உனக்கு
மூன்றுநாள் சம்பிரதாயம் ...

எனக்கது
உயிர்வதை கண்மணி

❀ **வீரமணி**

அதரப் பழசென்று
பலமுறை திட்டியுள்ளேன்...
அப்பாவின் மறைவுக்குப் பின்
பாதுகாக்கப்படும் அவரது உடமைகள்...

❀ **மா.பாலசுந்தரம்**



சமிக்ஞை
விளக்கு வளைவில்
உன் உருவில்
என்னை கடந்து சென்றது
நீயாயிருக்கலாம்
நீயின்றி யாரோவாகவும் இருக்கலாம்
ஊர்ஜிதப்படுத்துமுன்
உன்னை விரட்டிய
சமிக்ஞை விளக்கு
யென்னை நகரவிடாமல்
நிறுத்தி வைத்திருக்கிறது
நீயோ நீயற்ற யாரோ
மறுபடியும் கடந்த கால
முற்றுப்புள்ளியில்
கமா முளைத்துக் கொள்ள
போதுமானதாக இருக்கிறது
யதார்த்ததின் மீது விழுந்த
ஒரு சுழிப்பு.

**க. அய்யப்பன்**



அரிசிப் பானையில்
அரிசி குறைவதைப் போல
என்னிடமிருந்த
அன்பும் குறைந்து விட்டது

எல்லா அன்பையும்
உன்னிடமே கொட்டித்
தீர்த்து விட்டேன்

நான் ஆசையாய்
வைத்திருந்த எல்லா
காதல் வார்த்தைகளையும் எடுத்து
உனக்கு கவிதை எழுதி விட்டேன்
அதுவும் தீர்ந்து விட்டது

அது கூட பரவாயில்லை

உன்னைத் திட்டி திட்டி
என்னிடமிருந்த கெட்ட வார்த்தைகளும்
தீர்ந்து போய் விட்டது

அது தான் கொஞ்சம் கவலையாக இருக்கிறது.

**கவி செல்வா**

# சிலுவையில் அறையப்படும் ஆணிகள்



சிலுவையில்
அறையப்படப்போகுமுன்
ஆணிகளின் தரம்
சோதனைக்குட்படுத்தப் படுகிறது...

சுத்தியலின் அடியினை தாங்கும்
வலிமையுடையதாய் இருத்தல் அவசியம்...
அதேசமயம்
மரச்சிலுவையினை பெயர்த்து விடும்
பாதிப்புகளற்றதாகவும் இருக்க வேண்டும்...

குருதியை குடித்து
சதையையும்
எலும்பு, நரம்புகளையும்
நொறுக்கி உட்புகும்
கூர்மையான
மூன்று நீள ஆணிகளே
இறுதியில் தேர்வாகின்றன...

மேசியாவின் கைகளையும்
அவரின் கால்களையும்
துளைத்து
அறையப்படும் ஆணிகள்
அவரோடு....
உலக பாவங்களையும்
சுமக்கின்றன...

மீட்பரின் ஆன்மா
கர்த்தருக்குள்
நித்திரையானதும்,
பிடுங்கி எறியப்படும்
வருத்தப்பட்டு பாரம் சுமந்த
ஆணிகள் அதற்குபின்
அவசியமற்றதாகி விடுகின்றன...

பிறிதொரு நாளில்
உயிர்த்தெழும்
அவ்வாணிகளை உருக்கி
உருவாகிறது
தேவாலய மணியினை சுமக்க
ஒரு சங்கிலி...!

**தங்கராஜ் பழநி**



பூமியின் சுழற்சியில்
ஏதோ ஒரு நாளில்
நீயும் நானும் மீண்டும்
சந்திக்க நேரிடுகிறது
நல்லா இருக்கீங்களா என்கிறாய்
ஏதோ...என்கிறேன்
சட்டென்று தடித்த மௌனம் ஒன்று குறுக்கே
நின்றுகொள்கிறது
வழக்கம்போல நீதான் வார்த்தைகள் தொடங்குகிறாய்
உன் ஊர் பேருந்து வரும் வரை நீட்டிப்புச்செய்யப்பட்ட
அச்சந்திப்பில் கடந்தவைகளையும்
நிகழ்ந்தவைகளையும் பேசிக்கொண்டிருக்கிறோம்
எப்பொழுதும்
தாமதமாய் வரும் உன் ஊர்ப்பேருந்து அன்றுஎன்னவோ
முன்னதாகவே வந்து நிற்க
ஓடிச்சென்று ஏறிக்கொண்டு ஜன்னலோரத்தில்
கை அசைக்கிறாய் மெல்ல மறைகிறது பேருந்து
உன்னோடு
பேசிய வார்த்தைகளில்
இல்லை எதுவும்
நீயும் நானும் சந்தித்துக்கொண்டது  அந்த சிறு
மௌனத்துக்குள்தானே....

**நேசன்மகதி**



எல்லா திருமணங்களும்
எல்லா விழாக்களும்
எல்லா துக்கங்களும்
நீங்களின்றி இல்லை
மிக நெருங்கி
சிரிக்கிறீர்கள்
தோள் மீதும் கூட
கைப்போட்டு கொள்கிறீர்கள்
அவசியமான
நெடும்பயணத்தில் உடன்
வருகிறீர்கள்
உறவுகளின் விரிசல்களை
அளவெடுக்கிறீர்கள் அல்லது
அளவு கொடுக்கிறீர்கள்
ஆனால் மொய் எழுதி விட்டு
கை நனைக்காமல்
கிளம்புகையில் தான்
விளங்குகிறது
அந்நியம்...

**ச.ஜெய்**

எழுத்தாணியை
உளியாக்குவான் கவிஞன்.....
உளியை
எழுதாணியாக்குவான்
சிற்பி......

**ஸ்ரீவாரி**



தையல்காரரின் கால்கள்
வாழ்வின் மேடுபள்ளங்களை
நிரப்பும் பாவனையில்
அழுத்துகின்றன
காலச் சக்கரத்தை.

துணிகள்மீது
ஏறி இறங்கும்
ஊசியின் வேகத்தோடு
ஒரு தியானத்திற்குள்
நிலைக்கின்ற கண்கள்.

பண்டிகைக்கு முந்தையநாள்
இரவுக்குள் முடிக்க
இடப்பட்ட கட்டளைகள் அனைத்தும்
காதுகளை நிரப்ப
சிக்கு விழுந்த நூலினைப்போல்
நரம்புகள் இறுக்குகின்றன
அவரது கழுத்தை.

தன் வருகைக்காகக்
காத்திருக்கும் மகனின் முகம்
வந்துபோகும் துக்கத்திற்கிடையே
ஆறுதலாய் அவர் காண்பது
மேசைமீது கிடக்கும்
வண்ண வண்ண பட்டன்கள்
அத்தனையிலும்
அப்பிள்ளையின்
ஸ்மைலிகளை.

❀ **அன்றிலன்**



உன் விழியெனும் பெருங்கடலில்தான்
விரிந்துகிடக்கிறது என்னுலகம்
மறந்தும் மனம் குறுகாதே
நினைவு நாளங்களில்
நிரம்பும் எடை கனத்தால்
கலங்கக்கூடும் அவ்விழிகள்.

உயிர் பிடித்திருக்கும் கிளைக்கு
நீரூற்றியவள் நீ
உனக்கு பதில் நானே
பூக்கவும் செய்கிறேன்
பூவிரியும் அத்தருணம் மொத்தமும்
நீ உள்ளிறங்கும் ஒரு நிகழ்வு.

கரையேற முயன்று முயன்று
தோற்றுபோகிறேன்
ஒரு பேரலையாக
எதிர்படும் நீயோ பெருமலையாக
உன் விழியெனும் பெருங்கடலுக்கு
வழியமைக்கும் கரைகள் இல்லை
அதில் நீளும் பார்வைக்கு
திரைகள் இல்லை

இல்லாது போயினும்
நில்லாது வேகமேடுக்கும்
நின் காதலில் முளைக்கிறேன் நான்
அதில் திளைக்கிறாய் நீ
இப்போது.............
உனக்கு பதில் நானும்
எனக்கு பதில் நீயும் பூத்துக்கொண்டிருக்கிறோம்.

**கா வெங்கடேஸ்வரன்**

# மூன்று இரண்டாகிற விதம்



என்னிடம் இரண்டு நல்ல சொற்களும்
ஒரே ஒரு கெட்ட சொல்லும் உள்ளது..

"வாழ்க வளமுடன்"
"நற்பவி நற்பவி"
இரண்டும் நல்ல சொற்கள்
"நாசமாய் போறவனே"
என்பது கெட்ட சொல்

நல்ல சொற்களை சொன்னால் நல்லது நடக்கும் –
இதுபாட்டி

நல்ல சொற்களை எழுதினால் நல்ல தீர்வு கிடைக்கும்..
.. இதுபெரியம்மா

நல்ல சொற்களை படித்தால்
நல்ல எண்ணம் வரும் இறுதியாக அம்மா

இது எனக்குப் போதிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது...
முன்பெல்லாம் நிறைய முறை கெட்ட சொல் தான்
வரும் இப்போது
கொஞ்சம் கொஞ்சமாக
நல்ல சொற்கள் வர ஆரம்பித்துவிட்டது...

முதன்முதலாக நல்ல சொல்லைச் சொல்லும் போது
நான் ஞானி போல் தெரிந்தேன்
பின்பு சாமியாராகி அடுத்து சாதாரணமாகி
கடைசியாக. வேறு வேலை இல்லாதவளாகிப்
போனேன்..

இப்போது உபயோகத்தில் இல்லாத கெட்ட சொல்
மெல்லத் தலை தூக்குகிறது. பின் படம் எடுக்கிறது
ஆடுகிறது...

ஆனாலும் நான் நல்ல சொற்களையே தொடர்கிறேன்
..
நல்ல சொற்களையே
பிடித்துக் கொள்கிறேன் .
நல்ல சொற்களையே காதலிக்கவும் செய்கிறேன்..

அந்த நல்ல சொற்கள் எனக்கு கட்டுப்படுகிறது ..
நான் அதற்கு கட்டுப்படுகிறேன் ..

நிறைகிறது வாழ்க்கை
இந்தமுறை ஒரு ரோஜாவோடு வந்த. நீ
அடுத்தமுறை இரண்டு ரோஜாவோடு வா...

அந்தஇரண்டு
நல்ல சொற்களையும் நான் உனக்கு தாரை
வார்க்கிறேன்.....

❀ **கலைச்செல்வி**



பாறை என்கிறாய் எனை
பக்குவம் இன்றியே...

ஒளி பட்டு மலரக் காத்திருக்கும் ஆம்பல் மலரல்ல
உன் உளி பட்டு மலரக் காத்திருக்கும் சிலையுமல்ல....

உன் விரல் பட்டு மலரக் காத்திருக்கும் வீணையுமல்ல
உன் விழிபட்டு மலரக்
காத்திருக்கும்
மழலையுமல்ல...

உன் வழி பார்த்துக் காத்திருக்கிறேன்
நீ வந்தால்போதுமென
எதற்கும் இசையாது
அசையாது
நானும்கூட பாறைதானே....

❀ **ஜனனி**

பூமிக்குள் புதைந்து இருக்கும்
கிழங்கில் இருந்து தான்
கோரைப் புல்லும் பிறக்கிறது
காந்தள் பூவும் பூக்கிறது..!

❀ **ஸ்ரீவி.முத்துவேல்**



மௌனம் என்பது முற்று முழுதாக
மொழிபெயர்க்கப்பட்டால்..,

தொட்டுக் கலையாத இரவும்..,
தினம் உலா போகும் நிலவும் - ஏன்
உன் புன்னகை கூட அர்த்தமற்று - ஏனோ
நிலை தடுமாறி போகும் அல்லவா..?

உண்மை என்னவென்றால்..,
சொல்லாத மௌனத்தில் தான்,,,

அத்தனை ஆச்சரியம்..,
அழியாத காதல்..,
அளவிலா ரசனை..,
ஆட்பறிக்கும் அழகு..,
முற்று முழுதாக ஒளிந்து
கிடக்கிறது..,
இன்னும் - இன்னும்..,
மாறாத ஊற்றாக..!

ஸுமைஹா

# அப்பாவின் போதை



வெள்ளை நிறத் தூய வேட்டியும்,
சட்டையும்
அழுக்குக் காணாத
அம்பர் சைக்கிளும்
உள்ளூர் கட்சியொன்றின்
நகரப் பொறுப்பாளர்
பதவியும் அப்பாவிற்கு அழகானவை.
அர்த்த ராத்திரியில் ரைஸ் மில்லில்
நண்பர்களுடன் குலாவி,
பிராந்தி வாடையுடன் வருவதில்
மட்டும்
பெருங்கவலை அம்மாவுக்கு.
இரவில்
அம்மாவின் கண்ணீரில்
மிதந்து கொண்டிருக்கும்
அப்பாவின் போதை.

**சூர்யநிலா**

மலர்த்துவதில் மலர்வதில்லை பூக்கள்
பறக்க சிறகுலர்த்தும்
பறவைகள் போலே
உரத்து சிரித்து கடக்கிறது
காற்று
தன்னால் மட்டுமே
இவையாவுமென

**பூங்கோதை கனகராஜன்**



அவர்கள் எனக்காய் ஒரு முகம் வரைந்தார்கள்
அவர்கள் எனக்காய் அதில் ஒரு உடலைப்
பொருத்தினார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு கதையை உருவாக்கினார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு கடவுளைக் கொண்டு
வந்தார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு பாதையை தயார்
செய்தார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு எல்லையை வகுத்தார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு கடிவாளத்தை இட்டார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு தண்டனையை விதித்தார்கள்
அவர்கள் எனக்காய் ஒரு கல்லறையைக் கட்டினார்கள்

இத்தனைக்கும்
அவர்கள் என்னையோ
நான் அவர்களையோ
ஒருபோதும் அறிந்திருக்கவில்லை

பின்னும்
நான் ஒரு பெண்
அது போதாதா என்ன
விருப்பம் போல என் வாழ்வை
அவர்களே வடிவமைத்திட

❀ **ரிஸ்கா முக்தார்**



அறைகள் நிறைய
வியாபித்துக் கிடந்த
புத்தகக் கூடுகளில்
வார்த்தைகளின் வாசம்
அன்பையும் பலிவாங்குதலையும்
நூற்றாண்டு மனிதர்களையும்
பேசுகிறது.
நமக்குத்தான் தெரியவில்லை
கதை ரணங்களின் கொடூரமென்று.

ஒவ்வொன்றாய் வாசிக்கையில்
என்னை ஒருவன்
கழுத்தை அறுக்க முயலுகிறான்
இப்போது வாசிப்பதை
நிறுத்தியிருக்கிறேன்.

ஆல்கஹால் ஒன்று
அரியணை ஏறுகிறது.

**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**

இன்றைக்கு அமர்ந்து செல்லும் இந்தப் பேருந்து
இருக்கையில்
நாளை யாரோதான் செல்லப்போகிறார்கள்
பக்கத்தில் உரசிக்கொண்டு அமர்ந்திருக்கும்
இந்த அழுக்கான பெண் அடுத்த நிறுத்தத்தில்
இறங்கிவிடலாம்

எதிர் இருக்கையிலிருந்து எட்டிப்பார்த்து
சிரிக்கும் குழந்தைக்கு உன் முகம்
நினைவிருக்கப்போவதில்லை

இந்த நிமிடத்திற்காக நீ உனக்குள் சிரித்துக்கொள்
முகம் சுளித்துக்கொள்
சுற்றுப்புறங்களைக் கண்டு ரசித்துக்கொள்

வாழ்வற்ற அடுத்த நிமிடம் உன்னைத் தன் பிடிக்குள்
கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக்கொண்டுள்ளது. . .

**லக்ஷ்மி**



தன்னில் கைவிடப்பட்ட துணிகளை
தன் குளிரை மறைக்க
மேலாடையைப் போல அணிந்துகொண்டு
அங்கிருந்தும் உடனே அங்கிருந்தும் நகர்கிறது நதி.
தலையில் மட்டும் தெளித்துக் கொண்டு கரையேறிவிட
எண்ணிய நடைபயணி கூழாங்கல் வழுக்கி விடாதபடி
மெல்ல அடிவைத்து
தன்னை முழுவதுமாக நனைக்கிறான்.
நதியில் நழுவும் ஆடைகளில் தரமானவற்றைக்
கரையில் மலைபோல் குவித்தபின்
இடுப்புவலியோடு நிமிர்கிறான் வேறொருவன்.
தப்பித்தால் போதுமென்று
நிர்வாணமாக ஓடுகிற நதியின் மேனியில்
பொட்டுப் பொட்டாய் ஒட்டியிருக்கிறது
திதி எள்.
குறி வைத்து இரையைக் கொத்திச் செல்லும்
பறவையைப் படம் பிடித்தவன் தவறவிடுகிறான்
நதியின் மேல் விழுந்த
ஒரு சொட்டுக் குருதியை.
நதிக்கு இணையாய் நெளிந்தோடுகிறது விஷமற்ற
குறுநதி.
சுள்ளென்று அடிக்கும் வெயிலில்
தலையில் துண்டோடு
பயனற்றுக் கிடக்கும் படகின் ஓரம்
நெடுநேரமாய்த் தூண்டிலிட்டுக் காத்திருக்கிறது
அக்க’றை’யில் காலம்.

-
**மா. காளிதாஸ்**

visai@padaippu.com

படைப்பு

# விசை

பல்சுவை மாத மின்னிதழ்



## படைப்பின் விசை

மிக விரைவில்

குறுங்கதைகள்
கட்டுரைகள்
விமர்சனங்கள்
நகைச்சுவைகள்
ஒரு பக்க கதைகள்
வரவேற்கப்படுகின்றன

**அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்**
visai@padaippu.com

உளி-1 • ஓசை-1 • மார்ச்-2023 • திங்களிதழ்

ISSN : 2582-4015